**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.32/2021 | Date | : 25.05.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**.4 | Taluk | : |
| Name | : **சரண்யா** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.05.2025

(எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் அரசு உதவி மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.10.2020ஆம் தேதி நான் மருத்துவமனை அலுவலில் இருந்தபோது ஈரோடு சூரம்பட்டிவலசு ஸ்ரீ முருகன் பரோட்டா ஸ்டால் உரிமையாளர் மூக்கையா என்பவரை இரவு 11.10 மணிக்கு அவரது உறவினரான ராமச்சந்திரன் என்பவரை என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

2. பின்பு அவரை நான் விசாரித்த போது தன்னை தெரிந்த நபர் ஒருவர் 17.10.2020 ஆம் தேதி இரவு 10.20 மணிக்கு தன்னுடைய புரோட்டா கடையில் வைத்து கத்தியால் கழுத்தை கீறிவிட்டதாகவும், அதனால் அவருக்கு காயம் ஏற்பட்டு விட்டதாகவும் சொன்னார். அவரை நான் பரிசோதனை செய்ததில் 1. இடதுபுற கீழ் தாடைபகுதியில் 5x1x0.5CM அளவில் வெட்டுக்காயம் இருந்தது. 2.வெட்டுக்காயம் 4x1x0.5 CM அளவில் இடது புற கீழ்தாடை பகுதிக்கு கீழ் இருந்தது.

3. மேற்படி மூக்கையாவை விசாரித்து அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் குறித்து விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டு அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை அளித்து உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சையில் இருந்தவர் 21.10 2020ஆம் தேதி சிகிச்சையில் இருந்து தன்னிச்சையாக வெளியேறி விட்டார் அதனால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கருத்து கூற இயலவில்லை என்று எனது அபி பிராயத்தை தெரிவித்து சான்றிதழ் வழங்கினேன். **(விபத்து இன்டிமேஷன் அ.த.சா.ஆ 2 ஆகவும், விபத்து பதிவேடு நகல் அ.த.சா.ஆ 3 ஆகவும், காயத்தின் தன்மை குறித்து நான் வழங்கிய கருத்துரை அ.த.சா.ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**. இது சம்பந்தமாக ஈரோடு தெற்கு காவல் நிலைய சப் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.05.25 17:13:48 +0530

Judicial Magistrate No.III,

Erode.